அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 145/2017
தேதி : 25.11.2017

**ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில்**
**பழைய நடைமுறையான காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை**
**பிரச்சாரத்தை அனுமதிக்க வேண்டும்**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் வேண்டுகோள்**

ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையம் செயல்படுத்தியுள்ள நடைமுறைகளில் ஒன்றாக, மாலை 5 மணிக்கு மேல் தேர்தல் பிரச்சாரம் செய்யக்கூடாது என்ற வரைமுறையை வகுத்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்னால், 24 மணி நேரமும் தேர்தல் பிரச்சாரம் செய்யலாம் என்ற நடைமுறை, படிப்படியாக நேரம் குறைக்கப்பட்டு, காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை என்று நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இந்த பிரச்சார நேரக் கட்டுப்பாடு, ஆர்.கே.நகர் தேர்தலில், காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை என்று மாற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

பகல் நேரங்களை விட மாலைப் பொழுதிலும், இரவு 10 மணிக்கு முன்பு தான், அலுவலக நேரம் முடிந்து வீடுகளில் அனைத்து வாக்காளர்களும் இருப்பார்கள். எனவே பகல் நேரங்களில் வேட்பாளர்கள் பிரச்சாரப் பணிகளை முழுமையாகச் செய்ய இயலாமல் போய்விடுகிறது. அதனால் மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை பிரச்சாரத்திற்கு உகந்த நேரம் என்ற அடிப்படையில் முன்பு வழக்கத்தில் இருந்த, காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பிரச்சாரம் மேற்கொள்ளலாம் என்ற நடைமுறையே தொடர அனுமதிக்க வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வேண்டுகோள் வைக்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com